தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர்சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 17.11.2020**

**முன்னிலை**

**திரு ரா.ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 1018/A/2019**

திரு A.முருகானந்தம் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
காவல் துணை கண்காணிப்பாளர்,
கூடுதல் காவல்துறை இயக்குநர் அலுவலகம், மாநில குற்ற ஆவண காப்பகம்,
எண்.95, சாந்தோம் நெடுஞ்சாலை,
R.A.புரம், சென்னை-600 028. .. பொது அதிகார அமைப்பு

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் 22.10.2018 தேதியிட்டு அனுப்பிய மனுவில், 2014, 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் குழந்தைகள் காணாமல் போனது குறித்த தகவல்களை 5 இனங்களில் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 29.11.2018 தேதியிட்டு பதிலளித்துள்ளார். அதன்பின்னர் மனுதாரர் 19(1)-ன் கீழ் 27.11.2018 தேதியிட்டு முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அதன்பின்னர் 03.02.2019 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை அனுப்பி, தான் கோரிய தகவல்கள் தனக்கு வழங்கப் படவில்லை என்று தெரிவித்து அவற்றைத் தனக்குப் பெற்றுத் தருமாறு கேட்டுள்ளார்.

2. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால் ஏற்கனவே 05.10.2020-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை மனுதாரருக்கு வழங்குவதற்கு கடைசி வாய்ப்பாக 15.10.2020-க்குள் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது. மனுதாரருக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை என்றாலோ,

முழுமையற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது தவறான, குறைபாடான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ, அவர் ஆணையத்திற்கு 21.10.2020-க்குள் கடிதம் மூலம் தெரிவிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

3. பொதுத் தகவல் அலுவலர், தமது ந.க.எண்.C2/2644/மா.கு.ஆ.கா/த.அ.உ.ச.2005/2020, நாள் 15.10.2020 என்ற கடிதத்தில் மனுதாரரின் கோரிக்கைகளுக்கு அனைத்துத் தகவல்களை வழங்கியமைக்கான சான்றாக அவற்றின் நகல்களை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். மனுதாரரும் தனது கோரிக்கைகளுக்கு அனைத்து தகவல்களையும் பொதுத் தகவல் அலுவலர் வழங்கிவிட்டதாகவும், பெறப்பட்ட தகவல்களால் தான் மனநிறைவு அடைவதாகவும் தெரிவித்தார். **ஆகவே இவ்வழக்கை முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.**

**ஒம்/- (ரா. ராஜகோபால்)**

**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

<u>வழக்கு எண். SA 1018/A/2019</u>

பெறுநர்

<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர்/ காவல் துணை கண்காணிப்பாளர்,
கூடுதல் காவல்துறை இயக்குநர் அலுவலகம்,
மாநில குற்ற ஆவண காப்பகம்,
எண்.95, சாந்தோம் நெடுஞ்சாலை,
R.A.புரம், சென்னை-600 028.

<u>மனுதாரர்</u>

திரு A.முருகானந்தம்,
எண்.50/18-1, திரௌபதி அம்மன் கோயில்
1வது தெரு, வேளச்சேரி,
சென்னை-600 042.

*PR/PS 19/11/2020*

அனுப்புநர்

பொது தகவல் அலுவலர் மற்றும்
காவல் துணை கண்காணிப்பாளர்,
குற்ற செயல்முறை விளக்க கூடம்,
கூடுதல் காவல்துறை இயக்குநர் அலுவலகம்,
மாநில குற்ற ஆவண காப்பகம்,
எண்.95, சாந்தோம் நெடுஞ்சாலை,
ஆர்.ஏ.புரம், சென்னை – 600028.

SA 1018/19 CX

TAMILNADU INFORMATION COMMISSION
22 OCT 2020
CHENNAI 600 018

பெறுநர்

மதிப்பிற்குரிய மாநில தலைமை தகவல் ஆணையர் அவர்கள்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்),
எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை – 600018.

ந.க.எண்.C2/2644/மா.கு.ஆ.கா/த.அ.உ.ச.2005/2020, நாள்: 15.10.2020.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : மனுதாரர் திரு.A.முருகானந்தம் - மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விளக்க கடிதம்.

பார்வை : 1.தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் வழக்கு எண்.SA/1018/A/2019, 05.10.2020.

2.State Child Protection Society Department of Social Defence Reference No.4502/SCPS/2018, dt.22.11.2018.

3.C.No.59/ RTI/MOB/SCRB/2018, dt.29.11.2018 தேதி அன்று மனுதாரருக்கு அனுப்பப்பட்ட தகவல்.

4.ந.க.எண்.278/த.அ.உ.ச./கு.செ.மு.வி.கூ./மா.கு.ஆ.கா. நாள்:17.10.2020.

5.ந.க.எண்.279/த.அ.உ.ச/கு.செ.மு.வி.கூ./மா.கு.ஆ.கா. நாள்:17.10.2020.

*******

பார்வையில் 1ல் கண்ட தங்கள் ஆணையத்தின் மேலான உத்தரவின் ஆணை 15.10.2020 அன்று பெறப்பட்டு அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் பின்வருமாறு பணிந்து சமர்ப்பித்துக்கொள்ளப்படுகிறது. திரு.A.முருகானந்தம், வழக்கறிஞர், சென்னை-42 என்பவரின் 22.10.2018 நாளிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழான விண்ணப்பம் பார்வை 2ல் கண்டபடி பொது தகவல் அதிகாரி, மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம், சமூக பாதுகாப்புத்துறை, கெல்லிஸ், சென்னை–10 அவர்களிடமிருந்து 23.11.2018ம் தேதி இவ்வலுவலகத்திற்கு கடிதம் மூலம் பெறப்பட்டது அந்த மனுவில் மனுதாரர் திரு.A.முருகானந்தம், கோரியுள்ள தகவல்களின் கேள்விகளான 2(A) 2(C) மற்றும் 2(D)–ற்கு இப்போது அதிகார அமைப்பில் பராமரிக்கப்படும் ஆவணங்களின் அடிப்படையில் தகவல்கள் மேலே குறிப்பிட்டுள்ள பார்வை 3ல் கண்டபடி

மனுதாரருக்கு 29.11.2018 அனுப்பப்பட்டுள்ளது மற்றும் தற்போது தங்கள் ஆணையத்தின் உத்தரவுபடி மீண்டும் பார்வை 4ல் கண்டபடி மனுதாரருக்கு 17.10.2020 அளிக்கப்பட்டுள்ளன என்பதை இத்துடன் அதன் நகலகள் இணைக்கப்பட்டுள்ளன என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மனுதாரர் மனுவில் கோரிய கேள்விகளுக்கு 2(B) மற்றும் 2(E)–ற்கான தகவல்கள் இப்பொது அதிகார அமைப்பில் பராமரிக்கப்படவில்லை என்ற விவரமும் மனுதாரர் திரு.A.முருகானந்தம் என்பவருக்கும் பொது தகவல் அதிகாரி, மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம், சமூக பாதுகாப்புத்துறை, கெல்லிஸ், சென்னை–10 என்பவருக்கு 29.11.2018 பார்வை 3ல் கண்டபடி தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மனுதாரர் கோரிய அனாதை குழந்தைகள் பராமரிக்கும் இல்லத்தின் கண்காணிப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான விவரங்கள் அனைத்தும் பொது தகவல் அதிகாரி, மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம், சமூக பாதுகாப்புத்துறை, கெல்லிஸ், சென்னை–10 பராமரித்து வருவதால் மனுதாரர் கோரிய தொடர்பான கேள்வி எண் 2(B) மற்றும் 2(E)–ற்கான தகவல்களான அனாதை இல்லத்தில் காணாமல் போன குழந்தைகளின் விவரங்களை பொது தகவல் அதிகாரி, மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம், சமூக பாதுகாப்புத்துறை, கெல்லிஸ், சென்னை–10 அவர்களிடமிருந்து உடனடியாக மனுதாரர் மற்றும் மாநில தகவல் ஆணையத்திற்கு வழங்குமாறு C.No.279/RTI/MOB/SCRB/2020, dt.17.10.2020-ன்படி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதன் நகல் தங்களின் மேலான பார்வைக்காக இத்துடன் பணிந்து சமர்ப்பித்துள்ளேன் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

17/10/2020

பொது தகவல் அலுவலர் மற்றும்
காவல் துணை கண்காணிப்பாளர்,
மாநில குற்ற ஆவண காப்பகம்,
சென்னை – 600028.

**இணைப்பு** : 1. C.No.59/ RTI/MOB/SCRB/2018, நாள் 29.11.2018 குறிப்பிட்ட மனுதாரர் திரு.A.முருகானந்தம மற்றும் பொது தகவல் அதிகாரி, மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம், சமூக பாதுகாப்புத்துறை, கெல்லிஸ், சென்னை–10 தகவல் அளிக்கப்பட்ட கடிதங்களின் நகல்கள்.

2. C.No.278/RTI/MOB/SCRB/2020, dt.17.10.2020 மனுதாரருக்கு ஆணையத்தின் உத்தரவின்படி அளிக்கப்பட்ட தகவல் அடங்கிய கடிதத்தின் நகல்.

3. C.No.279/RTI/MOB/SCRB/2020, dt.17.10.2020 2020 ஆணையத்தின் உததரவின்படி பொது தகவல் அதிகாரி, மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம், சமூக பாதுகாப்புத்துறை, கெல்லிஸ், சென்னை–10 அவர்களுக்கு மனுதாரருக்கு அளிக்க வேண்டிய ஏனைய தகவல்கள் அளிக்கக்கோரி அனுப்பப்பட்ட கடிதத்தின் நகல்.

Public Information Officer,

O/o. Addl.Director General of Police,
State Crime Records Bureau,
No.95, Santhome High Road,
R.A.Puram, Chennai-28.

---

C.No.59/RTI/MOB/SCRB/2018. Date:29.11.2018.

Sub: Police - SCRB - Right to Information Act, 2005 - RTI Application of Tr.A.Muruganandam, Adocate, Chennai - Reg.

Ref : 1.RTI Application dated: 22.10.2018 of Tr.A.Muruganandam, Advocate, Chennai received by this office on 23.11.18.
2.Lr.No.4502/SCPS/2018 dt.22.11.18 of PIO/SCPS/ Dept. of Social Defence, Kellys, Chennai-10.

-oOo-

Kind attention is invited to your RTI petition cited in the references.

As per the available records of SCRB, we have provided the data on Missing Children for the years 2014 to 2016 in respect of Tamil Nadu State for Sl.Nos. 2 (a), 2(c) & 2(d) as Annexure-I. The remaining details sought in Sl.Nos.2(b) & 2(e) are not available with SCRB.

Encl: As above.

Public Information Officer,
SCRB, Chennai.

To

Tr.A.Muruganandam,
Advocate,
No.50/18-1, Throwpathi Amman Koil,
1st Street, Velachery,
Chennai-600 042.

Copy to:

The Public Information Officer, State Child Protection Society, Department of Social Defence, Kellys, Chennai-10.

**ANNEXURE-I**

## DETAILS OF MISSING CHILDREN REPORTED, TRACED AND UNTRACED FOR THE YEARS 2014, 2015 AND 2016

**Reply to Q.Nos. 2(A), 2(C) & 2(D)**

| YEAR | TOTAL NUMBER OF MISSING CHILDREN REPORTED | TOTAL NUMBER OF MISSING CHILDREN TRACED AS ON DATE 30.09.2018 | TOTAL NUMBER OF MISSING CHILDREN UNTRACED AS ON DATE 30.09.2018 |
|---|---|---|---|
| 2014 | 3373 | 3318 | 55 |
| 2015 | 4280 | 4221 | 59 |
| 2016 | 4632 | 4475 | 157 |

காவல்துறை

அனுப்புநர்

பொது தகவல் அலுவலர் மற்றும்
காவல்துறை துணை கண்காணிப்பாளர்,
மாநில குற்ற ஆவணக்காப்பகம்,
சென்னை - 600 028.
தொலைபேசி எண்: 044-24622744
மின்னஞ்சல் முகவரி:
mobdspscrb@gmail.com

பெறுநர்

திரு.A.முருகானந்தம் (வழக்கறிஞர்),
எண்.50/18-1, திரௌபதி அம்மன்,
கோவில் முதல்தெரு,
வேளச்சேரி, சென்னை-42.

---

ந.க.எண்.278/த.அ.உ.ச./கு.செ.மு.வி.கூ./மா.கு.ஆ.கா.    நாள்:17.10.2020.

அய்யா,

பொருள் : த.அ.உ.ச. 2005 - மாநில தகவல் ஆணையத்தின் உத்தரவின்படி தகவல் பற்றிய விவரம் - தொடர்பாக.

பார்வை :
1. தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் வழக்கு எண்.SA/1018/A/2019, நாள்: 05.10.2020.
2. State Child Protection Society Department of Social Defence Reference No.4502/SCPS/2018, dt.22.11.2018.
3. C.No.59/ RTI/MOB/SCRB/2018, dt.29.11.2018
4. C.No.279/MOB/SCRB/2020, dt.17.10.2020 ன் படி மாநில குழந்தைகள் பாதுபாப்பு சங்கத்திற்கு அனுப்பப்பட்ட கடிதம்.

-oOo-

பார்வை 1ல் காணும் 05.10.2020 நாளிட்ட மாநில தகவல் ஆணையத்தின் பெறப்பட்டுள்ள ஆணை மீது தங்களுக்கு தகவல்கள் வழங்கப்படுகிறது.

| தகவல் எண். | கேள்விகள் | பதில்கள் |
|---|---|---|
| 2A | Give me the details of Missing Children in Tamil Nadu during the year 2014, 2015 & 2016 | Total number of Missing Children for the year 2014 was 3373, for the year 2015 was 4280 and 2016 was 4632. |
| 2B | Give me the details of Missing Children particularly in Children orphanage home during the year from 2014, 2015 & 2016. | This information are not available with SCRB. In this regard we have send letter to State Child Protection Society, Department of Social Defence to furnish the details at once, as per above 4th cited reference. |
| 2C | Give me the details of Missing Children found during the year 2014, 2015 & 2016. | The total number of Missing Children traced mentioned in the previous reply as per above reference 3rd cited as on 30.09.2018 – for the year 2014 was 3318, 2015 was 4421 and 2016 was 4475. |

| | | |
|---|---|---|
| 2D | Give me the details of Missing Children unfound during the year from 2014 , 2015 & 2016. | The total number of Missing Children untraced mentioned in the previous reply as per above reference 3rd cited as on 30.09.2018 – for the year 2014 was 55, 2015 was 59 and 2016 was 157. |
| 2E | Give me the names of children orphanage home and list of missing found and unfound during the year 2014, 2015 & 2016. | The information are not available with SCRB. Hence we have send letter to State Child Protection Society Department of Social Defence to furnish the details at once, as per above 4th cited reference |

17/10/2020

பொது தகவல் அலுவலர் மற்றும்,
காவல்துறை துணை கண்காணிப்பாளர்,
கு.செ.மு.வி.கூ./மா.கு.ஆ.கா.,
சென்னை-28.

நகல் : C.No.279/MOB/SCRB/2020, dt.17.10.2020 ன் படி மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம், சமூக பாதுகாப்புத்துறை, சென்னை அனுப்பப்பட்ட கடிதத்தின் நகல்.

காவல்துறை

| | |
|---|---|
| அனுப்புநர் | பெறுநர் |
| பொது தகவல் அலுவலர்,<br>காவல்துறை துணை கண்காணிப்பாளர்,<br>மாநில குற்ற ஆவணக்காப்பகம்,<br>சென்னை - 600 028.<br>தொலைபேசி எண்: 044-24622744 | பொது தகவல் அலுவலர்,<br>மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம்,<br>சமூக பாதுகாப்புத்துறை,<br>எண்.300, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,<br>கெல்லிஸ், சென்னை-10. |

மின்னஞ்சல் முகவரி:
mobdspscrb@gmail.com

---

ந.க.எண்.279/த.அ.உ.ச/கு.செ.மு.வி.கூ./மா.கு.ஆ.கா. நாள்:17.10.2020.

அய்யா,

பொருள்: த.அ.உ.ச. 2005 - மாநில தகவல் ஆணையத்தின் உத்தரவின்படி தகவல் பற்றிய விவரம் - தொடர்பாக.

பார்வை: 1. தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் வழக்கு எண்.SA/1018/A/2019. நாள்: 05.10.2020.
2. State Child Protection Society Department of Social Defence Reference No.4502/SCPS/2018, dt.22.11.2018.
3. C.No.59/ RTI/MOB/SCRB/2018, dt.29.11.2018 ஏற்கனவே தங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதம்
4. C.No.278/RTI/MOB/SCRB/2020, dt.17.10.2020 ன் படி மனுதாரருக்கு அனுப்பப்பட்ட தகவல்கள் அடங்கிய கடிதம்.

-oOo-

பார்வை 1ல் கண்ட 05.10.2020 நாளிட்ட மாநில தகவல் ஆணையத்தின் பெறப்பட்டுள்ள ஆணை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது. பார்வை 2ல் குறிப்பிட்டபடி தங்கள் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட கடிதத்தில் குறிப்பிட்டபடி திரு.A.முருகானந்தம், எண்.50/18-1 திரெளபதி அம்மன் கோவில் முதல்தெரு வேளச்சேரி, சென்னை-42 என்பவரின் தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் மூலம் தங்கள் அலுவலகத்திற்கு கேட்கப்பட்ட தகவல்களின்படி மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விகள் எண்.2A, 2C மற்றும் 2D ஆன இப்பொது அதிகார அமைப்பில் பராமரிக்கப்படும் ஆவணங்களின் அடிப்படையில் அளிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் கோரிய ஏனைய 2B மற்றும் 2E ற்கான தகவல்கள் இப்பொது அதிகார அமைப்பில்

பராமரிக்கப்படவில்லை என்ற விவரம் தங்களுக்கும் மனுதாரருக்கும் பார்வை 3ல் கண்டபடி 29.11.2018 அன்று கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மனுதாரர் திரு.A.முருகானந்தம் குறிப்பிட்டுள்ள மனுவில் கேள்வி 2B மற்றும் 2E ஆகிய கேள்விகள் குழந்தைகள் அனாதை இல்லங்கள் தொடர்பாக கோரிய தகவல்கள் என்பதால் குழந்தைகள் அனாதை இல்லங்கள் தொடர்பாக கண்காணிப்பு, பராமரிப்பு ஆகியவை தங்கள் துறை மூலம் பராமரித்து வருவதால் இது தொடர்பான மனுதாரர் கோரிய தகவல்களை மனுதாரருக்கும் மற்றும் மாநில தகவல் ஆணையத்திற்கு உடனடியாக வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. அதன் நகலை மாநில குற்ற ஆவணக்காப்பகத்திற்கும் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

17/10/2020

பொது தகவல் அலுவலர் மற்றும்,
காவல்துறை துணை கண்காணிப்பாளர்,
கு.செ.மு.வி.கூ./மா.கு.ஆ.கா.,
சென்னை-28.

இணைப்பு : 1. தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் வழக்கு எண்.SA/1018/A/2019. நாள்: 05.10.2020. ஆணையின் நகல்.

2. திரு.A.முருகானந்தம் (வழக்கறிஞர்), எண்.50/18,-1 திரௌபதி அம்மன், கோவில் முதல்தெரு, வேளச்சேரி, சென்னை-42 மனுதாரரின் கடிதத்தின் நகல்.

3. Letter from State Child Protection Society Department of Social Defence Reference Lr.No.4502/SCPS/2018, dt.22.11.2018 கடிதத்தின் நகல்.

4. C.No.59/ RTI/MOB/SCRB/2018, dt.29.11.2018 ஏற்கனவே தங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் நகல்.

5. C.No.278/MOB/SCRB/2020, dt.17.10.2020 ன் படி மனுதாரருக்கு அனுப்பப்பட்ட தகவல்கள் அடங்கிய கடிதத்தின் நகல்.